DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 164/2009 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 9 | Caste | : |
| Name | : ராஜாஅமுதன் | Calling | : |
| Father / Husband Name | : முத்துராக்கு | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 09th April 2025.

---

**(1வது எதிரி இறந்துவிட்டார், 2 முதல் 9 எதிரிகள் ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

நான் சிவகங்கை மஜித்ரோட்டில் குடியிருந்து வருகிறேன். நான் வழக்கறிஞராக வேலை செய்து வருகிறேன். நான் கடந்த 18.02.2009 ம் தேதியன்று காலை 06.30 மணிக்கு நானும் கிட்டு என்ற கிருஷ்ணன் என்பவரும் தளிர்தலை கிராமத்திற்கு செல்வதற்காக கோரவலசை என்ற கிராமத்திற்கு சென்று கொண்டிருந்தபோது அப்போது அங்கு வந்த காளையார்கோவில் சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்தை எங்கள் முன்பாக பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜர் நானும் கிருஷ்ணன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். பார்வை மகஜரில் உள்ள 1 வது சாட்சிக் கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

Web Copy

புகார்தாரர் எனது உறவினர் என்றால் சரிதான். 2 வதாக சாட்சி கையொப்பம் செய்துள்ள கிருஷ்ணன் எனது உறவினரா என்றால் சரியாகத் தெரியவில்லை. சிவகங்கையிலிருந்து கோரவலசை கிராமம் எத்தனை கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சுமார் 40 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் அன்றைய தினம் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் சிவகங்கையில் தான் இருந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம், B.Sc., B.L., 09.04.2025,**
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

Web Copy